சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின்(பொறுப்பு) செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 7257 /ஆ5/2024, நாள். 19 .09.2024

பொருள்: பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - தமிழ்மொழி இலக்கிய திறனறித் தேர்வு – அக்டோபர் 2024 – பள்ளி மாணவர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.011666/டி(3)/2024 நாள்.03.09.2024.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்.11.09.2024.
3. சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.011666/டி(3)/2024 , நாள்.13.09.2024.

.....

பார்வை(2)இல் காணும் செயல்முறைகளின்படி, 19.10.2024 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ள தமிழ்மொழி இலக்கியத் திறனறித் தேர்விற்கு பதினொன்றாம் வகுப்பு பயிலும் அனைத்து பள்ளி மாணவர்கள் (மெட்ரிக்/CBSE/ICSE உட்பட) www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலமாக விண்ணப்பப் படிவங்களை 05.09.2024 முதல் 19.09.2024 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட தேர்விற்கு விண்ணப்பிக்க 05.09.2024 முதல் 19.09.2024 வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. தற்சமயம் 26.09.2024 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

**பதிவேற்றம் செய்வதற்கான அறிவுரைகள்**

1. பள்ளிகளுக்கான UDISE CODE- பயன்படுத்தி விண்ணப்பித்த மாணவர்களின் EMIS எண்ணினைப் பதிவு செய்தவுடன் பெரும்பாலான விவரங்கள் உடனடியாக திரையில் தோன்றும், அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், திருத்தங்களை மேற்கொள்ளவும், விடுபட்டுள்ள விவரங்களையும், புகைப்படத்தையும் பதிவேற்றம் செய்தால் போதுமானதாகும். மெட்ரிக்/CBSE/ICSE/KV மாணவர்களுக்கும் இந்நடைமுறை பொருந்தும் . இவ்வாண்டு புதியதாக விண்ணப்பிக்கும் பள்ளிகள் இணைப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி பதிவு (Register) செய்த பின்

புதிய USER ID, PASSWORD -ஐ பயன்படுத்தி மாணவர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

2. தேர்வர்கள் விண்ணப்பத்தில் பூர்த்தி செய்துள்ள விவரங்கள் சரியானதா என்பதனைப் பள்ளி ஆவணங்களை ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிவேற்றம் செய்ய வேண்டும்.
3. பள்ளி முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர், முகவரியினை அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் (pinCode) பதிவு செய்யப்பட வேண்டும்.
4. வீட்டு முகவரி என்ற கலத்தில் பள்ளியின் பெயர் மற்றும் முகவரியினை பதியக்கூடாது. தேர்வரின் வீட்டு முகவரி மட்டுமே பதியப்படவேண்டும்.
5. பெற்றோரின் தொலைபேசி/அலைபேசி என்ற கலத்திலும் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் தொலைபேசி/அலைபேசி எண்ணையே பதிய வேண்டும்.
6. பதிவேற்றம் செய்த விவரங்களை ஒப்புகைச்சீட்டை கொண்டு தேர்வரின் விவரங்கள் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று உறுதி செய்து கொள்ளவும்.
7. மேற்படி தேர்விற்கான தேர்வுக் கட்டணம் ரூ.50/- -வீதம் Online –இல் செலுத்த வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்த இறுதி நாளான 27.09.2024 மாலை 06.00 மணிக்குள் Online –இல் தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
8. பதிவேற்றம் செய்த விவரங்களில் மாற்றம் ஏதேனும் செய்ய வேண்டியிருப்பின் தேர்வுக் கட்டணத் தொகை செலுத்துவதற்கு முன்னதாகவே சரி செய்து கொள்ள வேண்டும். தேர்வு கட்டணம் செலுத்திய பின்னர் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பதிவுகளில் எவ்வித திருத்தங்களும் செய்ய இயலாது.
9. பதிவேற்றம் முடிந்தவுடன் தேர்வர்களின் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் சீட்டு (ஒரு தேர்வருக்கு ரூ.50/- வீதம்) அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலர்களிடம் 03.10.2024க்குள் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- விண்ணப்பம் பதிவேற்றம் செய்யம் காலம் : 19.09.2024 முதல் 26.09.2024 வரை
- விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்ய கடைசி நாள்.26.09.2024

- தேர்வுக்கட்டணம் Online -இல் செலுத்த வேண்டிய கடைசி நாள்.27.09.2024
- பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் (Summary Report) மற்றும் தேர்வுக்கட்டண செலுத்துச் சீட்டை (Fees Receipt) உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய நாள்.30.09.2024 முதல் 03.10.2024 க்குள்

நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு பிறகு எக்காரணத்தை முன்னிட்டும் வாய்ப்பளிக்க இயலாது எனவும், புறச்சரக எண் (Out of Range number) கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வுக்கட்டணம் செலுத்தாதத் தேர்வர்களுக்கு தேர்வெழுத அனுமதி வழங்க இயலாது.

தேர்வரின் விண்ணப்பங்கள் மற்றும் ஒப்புகைச் சீட்டுகள் சம்பந்தப்பட்டப் பள்ளிகளின் தலைமையாசிரியர்/முதல்வர் வசம் வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

TTSE- Instruction for filling online Application

முதன்மைக்கல்வி அலுவலர்(பொ)
சென்னை
19/9/2024

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
   சென்னை மாவட்டம்.
2. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள் சென்னை மாவட்டம்(மாவட்டக் கல்வி அலுவலர் வழியாக)